# றொனி மீதான வழக்கை விசாரிக்க நீதிபதி மறுப்பு

## புதிய நீதிபதி நியமனம்

முன்னாள் நீதியமைச்சர் றொனி டீ மெல்லுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒக்டோபர் மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆனந்தகிரேரோ முன்னிலையில் விசாரிக்கப்பட இருந்தது. ஆனால் தனிப்பட்ட ரீதியில் தான் இந்த வழக்கை விசாரிக்க விரும்பவில்லை என்று அவர் தெரிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. இதனையடுத்து நீதிபதி வி. பி. வீரசூரியா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இந்த வழக்கில் சாட்சியமளிக்க மூன்று வெளிநாட்டு சாட்சிகளுக்கு இன்டர்போர் ஊடாக கட்டளை அனுப்ப நீதிபதி உத்தரவிட்டார். 38


பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 167 பிரசோற்பத்தி சித்திரை 31 (14-05-1991) செவ்வாய்


# புலிகள் அதிரடித் தாக்குதல்;

# சின்னமடுவில் 10 படையினர் பலி

## பத்துநிமிடத் தாக்குதலில் ஆயுதங்களும் மீட்பு

ஊர்காவற்றுறை சின்னமடுப்பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரது பாரிய காவல் அரண் மீது விடுதலைப்புலிகள் பத்து நிமிடங்கள் அதிரடித் தாக்குதலைத் தொடுத்தனர்.

நேற்று முன்தினம் இரவு 6 30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் ஏனைய படையினர் காயங்களுடன் தப்பி ஓடி விட்டனர்.

இத் தாக்குதலின் போது இராணுவத்தினரிடமிருந்து பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகள் தரப்பில் கப்டன் சுந்தர் (அடைக்கலம் அமிர்தநாதன் நெடுந்தீவு) வீரமரணமடைந்தார்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்:

★ ஏ. கே. எல். எம். ஜி - 1
★ ரிபி - 76

—04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் 35படையினர் பலி

வவுனியாப் பகுதியில் கடந்த 2ஆம் திகதி முதல் விடுதலைப்புலிகளுடன் நடைபெற்ற மோதல்களில் 35 படையினர் பலியானதாகவும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஊரடங்கு நீக்கம்

வவுனியாவில் கடந்த 2ஆம் திகதி முதல் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை முதல் நீக்கப்பட்டதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## கப்டன் சுந்தருக்கு நாவாந்துறையில் மக்கள் அஞ்சலி

நேற்று முன்தினம் சின்னமடு இராணுவ காவலரண் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரமரணம் அடைந்த கப்டன் சுந்தரின் (அடைக்கலம் அமிர்தநாதன்-நெடுந்தீவு) புகழுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணியளவில் நாவாந்துறை சென் நீக்கலஸ் சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்ட

—04 ஆம் பக்கம் பார்க்க

## கட்சி ஆதரவாளர் கைகலப்பு ஒருவர் சுட்டப்பட்டு மரணம்

கொழும்பு இரத்மலானைப் பகுதியில் அரசியல் கட்சி ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் முடிந்தது.

இதனால் ஒருவர் உயிரிழந்தார், மற்றொருவர் படுகாயம் அடைந்தார். இவர்கள் இருவரும் சூடுபட்டதும் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர் அதில் ஒருவர் அங்கு மரணமானார். 38

## விமானங்கள் தாக்குதல் நடத்தியபடி ஆனையிறவு முகாமினுள் பொதிகள்

ஆனையிறவு முகாமைச் சுற்றி நேற்று முன்தினம் கடும் விமானத் தாக்குதல் தொடர்ந்து கொண்டிருந்த போது விமானத்தில் இருந்து முகாமினுள் பொதிகள் போடப்பட்டன.

25 பொதிகள் வீசப்பட்ட போதிலும் பல முகாமிற்கு வெளியிலேயே வீழ்ந்தன. முகாமைச் சுற்றி இரு ஹெலிகள், அவ்ரோ, வை-12 விமானம், இரு பொம்மர்கள் என்பன கடும் குண்டு வீச்சை நிகழ்த்தின. சமார் பதினைந்து பீப்பாய்க் குண்டுகளும் வீசப்பட்டன.

பரந்தன், இயக்கச்சி நோக்கியும் விமானங்கள் கடும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## இரு போனஸ் இடங்கள் ஐ. தே. க விற்குகிடைத்தன

கடந்த சனியன்று தென்னிலங்கையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் ஐ. தே. க அதிகப்படியான வாக்குகளை பெற்றமைக்காக அதற்கு போனஸாக இரு இடங்கள் கிடைத்துள்ளன.

விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் நடைபெறும் தேர்தல்களில் அதிகளவு சதவிகிதமான வாக்குகளை பெறும் கட்சிக்கு போனஸாக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத்தின் 236 இடங்களில் ஐ தே க 193 இடங்களை கைப்பற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் பொதுத்தேர்தலுக்கு வழிவகுக்கலாம்

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐ. தே. கவிற்கு கிடைத்துள்ள வெற்றி வருட இறுதியில் பொதுத் தேர்தலுக்கு வழிவகுக்கலாம் என விபரமறிந்த கட்சித் தலைவர் சானக்க அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு கட்சியினுள்ளேயே இருந்த சில தனிப்பட்ட ரீதியிலான எதிர்ப்புகளை இத்தேர்தல் முடிவுகள் உடைத்தெறிந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் ஐ தே. கவிற்கு கிடைத்த இவ்வெற்றியானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் எதிர்காலத்துக்கு சவாலாகவும் அதிர்ச்சி அளிப்பதாகவும் உள்ளது எனவும் ஐ தே கவிற்கு எதிரான மாற்றுக் கட்சி என்ற தகுதியை சுதந்திரக்கட்சி இழந்துவிட்டது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## காரைநகர் அகதிகளுக்கு மூன்று கூட்டுறவுச்சங்கங்கள் உதவி

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய மூன்று சங்கங்களும் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளவர்களுக்கு இலவசமாக பக்கிபிறே வழங்கி வருகின்றன.

பங்கீட்டு அட்டையில் உள்ள குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கமைய பொறுத்து இந்தப் பால்மா

—04 ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவுப் பாடசாலை அதிபரை கடற்படை தடுத்து வைத்துள்ளது

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் நா. சங்கரப்பிள்ளை கடற்படையினரால் நயினாதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவில் இருந்து நேற்று பயணிகளுடன் படகில் வந்த போது நயினாதீவு இறங்குதுறையில் கடற்படையினரின் சோதனை நடைபெற்ற போதே இவ்வாறு தடுத்து

—04 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கின் காட்டுப் பகுதியில் படையினர் தேடுதல் நடத்தினர்

மட்டக்களப்பில் உள்ள குச்சவெளி திருக்கோணமடு, சிங்கபுர, கரடிக்குளம், கதிரவெளி, வாகரை, மாங்கேணி ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து கடந்த வெள்ளி காட்டுப் பகுதிக்கு சென்ற படையினர் அங்கு தேடுதலை நடாத்தினர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## பூநகரியில் விநியோகம்

1991 மாசி மாத பாடசாலை மாணவர்களின் மூத்திரைகளுக்கு 11.05-91 தொடக்கம் நாம்பேச்சை அரிசி, கௌபி, பயறு, உழுந்து,

—04 ஆம் பக்கம் பார்க்க

## அரசாங்க வைத்திய அதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கை

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் விரைவில் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மூன்று அம்சக் கோரிக்கைகளை சுகாதார அமைச்சுக்கு இச்சங்கம் சமர்ப்பித்து கால அவகாசம் கேட்டுள்ளது.

## ஐந்து புதிய உதவி அரச அதிபர்கள் யாழ் மாவட்டத்தில் நியமனம்

இலங்கை நிர்வாக சேவை தரம் இரண்டிற்கு யாழ் மாவட்டத்தில் ஐவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உதவி அரசாங்க அதிபர்களாக இவர்கள் பின்வரும் இடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

கே. வேதீஸ்வரன் - வடம

—04 ஆம் பக்கம் பார்க்க

## சிறு விளம்பரம்

### தேவை

சைவ உணவு தயாரிப்பதில் சிறந்த அனுபவம் உள்ள சமையல்காரர் உடன் தேவை. நேரில் சமுகமளிக்கவும் சம்பளம் திறமைக்கேற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். சைவ வித்தியா விருத்திச் சங்கம். திருநெல்வேலி. 05044

### விற்பனைக்கு

பயிர்களுக்கு ஊட்டமளிக்கும் அடிக்கட்டு உரமாகவும், பயிர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் பூச்சி பீடை கொல்லியுமான நீமியா உரம் மீண்டும் விற்பனைக்கு கிலோ பக்கெற் ரூ 10,00 மட்டுமே. இணுவில், திருநெல்வேலி, யாழ் நகர், அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கும். மிக்க வைற், யாழ்ப்பாணம். 05054


## வட்டு இந்துவில் அனுமதிப்பரீட்சை

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் 1993ஆம் ஆண்டுக்கான உயர்தர மாணவர்களைச் சேர்ப்பதற்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 30 க்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சையில் தோற்றத் தகுதியானவர்கள் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு முன்னதாக கல்லூரியில் அலுவலக நேரத்தில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறும் கல்லூரி அதிபர் இ. தாடி கேட்டுள்ளார்.

பிற பாடசாலைகளிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் தற்போது கல்வி பயிலும் பாடசாலை அதிபரின் உறுதிக் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும். (30)

## உயர்கல்வி அமைச்சின் நிருவாகத்தில்
# தமிழர் ஒருவரும் இல்லை எனப் புகார்

இந்நாட்டில் 30 சத விகித தமிழ் பேசும் மாணவர்களும், 25 சத விகித தமிழ்ப் பாடசாலைகளும் இருந்த போதிலும் கல்வி உயர் கல்வி அமைச்சின் நிருவாகத்தில் ஒருத்தருக்கு கூட தமிழர்கள் நியமிக்கப்படவில்லை என ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நாட்டில் அமைந்துள்ள 10 ஆயிரம் பாடசாலைகளில் 2532 பாடசாலைகள் அல்லது 25 சதவிகிதம் தமிழ்மொழிப் பாடசாலைகளாகும் அதே போன்று மொத்த மாணவர் தொகையான 40 இலட்சத்தில் 14 இலட்சம் அல்லது 30 சதவிகிதம் தமிழ் பேசும் மாணவர்களாவர்.

ஆனால் உயர்கல்வி அமைச்சின் நிர்வாக இயந்திரத்தில் தமிழர் எவருமே நியமிக்கப்படவில்லை

உயர்கல்வி அமைச்சு செயலாளர் உட்பட அவ்வமைச்சிலுள்ள செயலாளர், உதவிச் செயலாளர் பதவிகள் 39 இலும் முற்று முழுதாகச் சிங்களவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

இசுருபாயவில் கடமை புரியும் மொத்தம் 700 அதிகாரிகளில் கூட இருவர் மட்டுமே தமிழர் எனவும் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்க நிர்வாக இயந்திரத்தில் இனவிகிதாசாரம் கடைப்பிடிக்கப்படும் என்ற கொள்கை உதாசீனப்படுத்தப்படும் நிலை இடம்பெறுகின்றது என்பதற்கு உயர்கல்வி அமைச்சு நல்ல உதாரணமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நான் இரவில் அழுகிறேன்

கவிஞர்: மு, வே. யோ. வாஞ்சிநாதன்

சிட்டுக் குருவி வானில் பறந்து
சோகக் கீதம் பாடுது! — நம்
மொட்டுக் களின் இழப்பு கண்டு
மௌனமாகத் துடிக்குது!

மாவீரன் சென்ற பாதை
மனத்தில் துயரைக் கூட்டுது — தமிழ்
நாவில் பிறந்து வளர்ந்த கதையை
நமது கிளி மீட்டுது!

இனிய இளைஞன் இருக்கும் போது
என்ன கவலை என்றொரு
இனிய குயில் பாட்டுப் பாடி
இன்ப இசை ஊட்டுது!

வைகறையில் சேவல் எழுந்து
விடிவுக் காகப் பாடுது!
'செவ்வலைகள்' கடலில் எழுந்து
கடற் புலிகளை அணைக்குது!

இயற்கை தந்த செல்வமெல்லாம்
எம்மைக் கண்டு வருந்துது! — இதை
எண்ண ... எண்ண எனது கண்கள்
இரவில் நீரைக் கொட்டுது!

## ★ இன்று கடற் கரும்புலிகளின் எழுச்சிநாள்
# கரும்புலிகள் தாக்கிய கப்பலுக்குப்பலத்த சேதம்
## கடற்படையினரில் மேலும் மூவர் அபாய நிலையில்

பருத்தித்துறைக் கடலில் கடற்படைத் தாய்க்கப்பலின் மீது விடுதலைப் புலிகள் கடற்புலிப்பிரிவின் இருகரும்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்த கடற்படையினரில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதலின் போது காயமடைந்த, இறந்த கடற்படையினர் ஹெலிக்கொப்டர் மூலம் அனுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

கரும்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான கடற்படையின் ஆணை பிறப்பிக்கும் தாய்க்கப்பல் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் பாதுகாப்புத்துறை தற்பொழுது ஒத்துக் கொண்டுள்ளது.

இத்தத் தாய்க்கப்பல் மூன்று மாதங்கள் கடலில் தங்கி நிற்பதற்கான உணவு, எரிபொருள், ஆயுத வசதிகளைக் கொண்டது. இக்கப்பலுடன் சேர்ந்து பணிபுரியும் பீரங்கிப் படகுகளுக்கும், விசைப் படகுகளுக்கும் இத்தாய்க்கப்பலில் இருந்தே ஆணைகளும், சப்ளைகளும் வழங்கப்படுகின்றன

ஒரு முகாமை ஒத்த இத்தாய்க் கப்பலின் பொறுப்பதிகாரியாக உயர்தரத்திலுள்ள அதிகாரி ஒருவரே பணிக்கு அமர்த்தப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

60 மைல் கடற்பரப்பைக் கண்காணிக்கும் இக்கப்பலைக் கடந்த 4 ஆம் திகதி தகர்த்த கரும்புலிகள் கப்டன் ஜெயந்தன் (மட்டக்களப்பு), கப்டன் சிதம்பரம் (வல்வெட்டித்துறை) ஆகியோரின் எழுச்சி நாளும், மாபெரும் எழுச்சிக் கூட்டங்களும் இன்று வட்டுக்கோட்டை, நெடியகாடு, மட்டுவில் ஆகிய இடங்களில் நடைபெறுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சின்னப்புதுக்குளம் - மடுவீதியை பயன்படுத்த இராணுவம் தடை

வவுனியாவிலிருந்து வடபகுதிக்கு வருவதற்கு சில தினங்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்த சின்னப்புதுக்குளம் - மடு ஊடான சுற்றுப் பாதையில் பயணம் செய்வதை இராணுவம் தற்போது தடைசெய்துள்ளதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதால் எவரும் அப்பகுதியால் செல்லக்கூடாது என படையினர் தெரிவித்துள்ளனராம்

எனினும் மன்னார் வீதியை பிற்பகல் இரண்டு மணிவரையும் மக்கள் போக்குவரத்திற்குப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதாம்

### கூட்டம்

நாளை 15 ஆம் திகதி புதன்கிழமை பல. நோ. கூ. சங்கத்தலைவர்களின் கூட்டமொன்று யா. மா. கூ. சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் யாழ் மாவட்டத்துக்கான கிருமி நாசினிகளைக் கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு விநியோகிப்பது தொடர்பாக முக்கிய விடயம் ஆராயப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வேம்படியில் 70சதவீத கட்டடங்கள் சேதம்; புனரமைக்க மாணவர் நிதி சேகரிப்பு

வேம்படி மகளிர் பாடசாலை புனரமைப்புக்கு உதவும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வடமாநிலத்தின் மாணவியருக்குள்ள ஒரேயொரு தேசியப் பாடசாலையாக உள்ள வேம்படி மகளிர் கல்லூரியின் 70 சத வீதமான கட்டிடங்களும், அவற்றின் உபகரணங்கள் யாவும் அண்மைக்காலப் போர் நடவடிக்கைகளால் அழிந்தொழிந்து விட்டன. இதனால் நூற்றுக்கணக்கான மாணவிகள் இடிபாடுகளின் மத்தியிலும், ஆபத்தான சூழலிலும், வானம் பார்த்த கட்டிடங்களிலும் தமது படிப்பைத் தொடருகின்றனர்.

இதனால் வேம்படி பழைய மாணவர் சங்கம்பாடசாலைப் புனருத்தாரண நிதியை ஆரம்பித்துள்ளது வேம்படி பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் கூடுதலான நிதியை வழங்கி வேம்படி மகளிர் கல்லூரியின் அவசிய புனருத்தாரண வேலை செய்வதற்கு உதவுமாறு வேம்படி பழைய மாணவர் சங்கம் கேட்டுள்ளது. இந் நிதியை இலங்கை வங்கி, யாழ்ப்பாணம் மேற்கு நகர்க்கிளையிலுள்ள வேம்படி பழைய மாணவர் சங்கக் கணக்கு இலக்கம் 23320 க்கு ஆவணிமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு பழையமாணவர் சங்கம் கோரியுள்ளது.

## சனத்தொகை 1000 கோடியாகிறது

உலக சனத்தொகை அடுத்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆயிரம் கோடியாக அதிகரித்து விடும் என ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது உலக சனத்தொகை 540 கோடியாகும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் வெற்றியளித்துள்ள போதிலும் சனத்தொகை அதிகரித்துள்ளது.


## இலங்கை மின்சார சபை
## கிளிநொச்சி பிரதேச காரியாலயத்திற்கு
# வீடு வாடகைக்குத் தேவை

கிளிநொச்சி கச்சேரியில் இருந்து $1\frac{1}{2}$ கிலோ மீற்றர் சுற்றாடலுக்குள் 1000 சதுர அடிக்குக் குறையாமலும், மின் இணைப்பு, தண்ணீர் வசதியுடன், நல்ல நிலையில் உள்ள ஒரு வீடு வாடகைக்கு உடன் தேவைப்படுகிறது. வீடு இருந்தால் என்னுடனோ அல்லது கிளிநொச்சி டிப்போ மின் அத்தியட்சகருடனோ உடன் தொடர்பு கொள்ளவும்.

இப்படிக்கு
மின்பொறியியலாளர்

கிளிநொச்சி பிரதேசக்காரியாலயம்
இலங்கை மின்சார சபை,
பூநகரி வீதி,
பரந்தன். 05066

# LONDON EXAMS
## Nov. Dec. 1991

C. I. M. A. (I. C. M. A.)
I. D. P. M. (Computer)
I. A. B.
COMPUTER - BASIC

வகுப்புகள் 18.5.91 முதல் ஆரம்பமாகின்றன.

விரிவுரையாளர் குழு: சத்தியதாஸ், சிவலிங்கம், மதி, சிவபாதசுந்தரம், கந்தையா நரேந்திரன், புஷ்பா, ஜோசப்.

மேலும் விபரங்கட்கு:

School of Business Administration
(OLR தேவாலய மேற்குப்பக்கம்)
16, 3வது குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
05067

## முக்கிய அறிவித்தல்

க. மு. ஸ்ரீமார்க் மண்டான் பெயரில் போலிச் சுருட்டுக்கள் விற்பனை செய்யப்படுவதாக அறிய வந்துள்ளோம். போலி க. மு. ஸ்ரீமார்க் மண்டான் சுருட்டுக்கள் விலையிலும் தரத்திலும் குறைந்தவை என்பதை பாவனையாளர் கவனத்திற்கு அறியத்தருகிறோம். அசல் க. மு. ஸ்ரீமார்க் சுருட்டுக்கள் எமது கரணவாய் மண்டான் கொலனி என்னும் இடத்திலிருந்து துவிச்சக்கர வண்டி மூலமே விற்பனை செய்யப்படுகின்றன. குறைந்த விலையில் விற்பனையாகும் போலி க. மு. ஸ்ரீமார்க் சுருட்டுக்களை வாங்கி ஏமாறாதீர்கள். போலி க. மு. ஸ்ரீமார்க் சுருட்டு விற்பனையாளர் பற்றிய தகவல்கள் வரவேற்கப்படும்.

★ மோசடி செய்யும் உற்பத்தியாளரைக்கண்டு பிடித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

க. மு. ஸ்ரீமார்க் நிர்வாகம்
மண்டான் கொலனி, கரணவாய்
05065

# ‘இனக்கொலை தொடரின் தமிழர்க்கு இந்தியா உதவ வேண்டும்’ - சிதம்பரம்

இலங்கைத் தமிழர்கள் மீது இனப்படுகொலை தொடர்ந்தால் அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள இந்தியா உதவி அளிக்க வேண்டும். அத்துடன் இலங்கையிலிருந்து அகதிகள் வந்தாலும், போராளிகள் வந்தாலும் அவர்களுக்கு இந்தியா புகலிடம் அளிக்க வேண்டும் என முன்னாள் இந்திய மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் கோரியுள்ளார்.

ராஜீவ் அரசில் பதவி வகித்த சிதம்பரம் தமிழகப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

“இலங்கைப் பிரச்சினையில் புதிதாக ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டால் அது இனி முத்தரப்பு ஒப்பந்தமாகத்தான் இருக்க வேண்டும்” எனவும் அவர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இனப்படுகொலையிலிருந்து தங்களைக் காக்கவே 1983-84 இல் தமிழ்ப்போராளிகளுக்கு இந்திய ஆயுத உதவி வழங்கியது. இனி மேலும் கூட இலங்கைத் தமிழர்கள் மீது இனப்படுகொலை தொடர்ந்தால் அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள இந்தியா உதவி வழங்க வேண்டும் எனவும் ப. சிதம்பரம் அப்பேட்டியில் கூறியுள்ளார்.

## இமேஜை உயர்த்துவதில் இப்படியொரு ‘போட்டி’

தேர்தல் சமயத்தில் அரசியல்வாதிகள் தங்களுடைய அல்லது கட்சிகளுடைய இமேஜை உயர்த்திக் கொள்வதில் மிகுந்த அக்கறை காட்டுவார்கள்.

ராஜீவ்காந்தி ஒரிஸாவுக்குச் சென்றபோது அவருடன் சென்ற செக்யூரிட்டி கார் ஒரு ஆட்டின்மீது மோதிவிட்டது. இதைப்பார்த்த ராஜீவ்காந்தி உடனே ஆட்டின் சொந்தக்காரருக்கு நஷ்டஈட்டுத் தொகை கொடுக்க உத்தரவிட்டார். அப்புறம் அந்த ஆட்டின் சொந்தக்காரரும் அவருடைய கிராமத்தைச் சேர்ந்தவர்களும் ராஜீவ்காந்திக்கு வோட்டுப் போடாமல் வேறு யாருக்குப் போடுவார்கள்.

சந்திரசேகரும் ராஜீவ்காந்திக்குச் சளைத்தவரல்ல. டெல்லியில் அல்லது வெளி மாநிலங்களில் நடக்கும் நண்பர்களின் வீட்டுத் திருமண விழாக்களுக்கும் மற்றக் கொண்டாட்டங்களுக்கும் புயல் வேகத்தில் சென்று திரும்பி வந்துவிடுகிறார். சில சமயங்களில் ஒரே நாளில் ஐந்து ஆறு திருமண வீடுகளுக்கும் (விஸிட்) செய்கிறார்.

## தகுதியான தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

அரசாங்கப் பாடசாலைகளில் கடந்த ஜுலை மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் எவருக்கும் தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டிருக்கக் கூடாது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை 31.12.89 அன்று ஒரு வருட சேவையை பூர்த்தி செய்த தொண்டர் ஆசிரியர்களினால் நிரந்தர நியமனத்திற்கென அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், தகுதியானவர்களுக்கு விரைவில் நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார். 78

## மானி. மகளிர் உயர்தர அனுமதி

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் க. பொ. த. உயர்தர புதிய வகுப்புக்களில் சேர்வதற்குரிய விண்ணப்பங்களை 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி கல்லூரி அதிபர் திருமதி ய. தியாகராஜா அறிவித்துள்ளார்.

1990ஆம் ஆண்டு சாதாரணதர பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் எனவும் இதற்கான அனுமதிப் பரீட்சை 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (30)

## பண்டத்தரிப்பு பொதுச் சந்தையில் தரகர்கள் செயற்படத் தடை!

பண்டத்தரிப்புச் சந்தையில் தரகர்களின் தொல்லை ஒழிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தையில் தரகர்கள் எவரும் செயற்படக் கூடாது என்று சந்தைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை இச்சந்தையில் சேதமடைந்த- ஓட்டை உடைசல் தராசுகளைப் பயன்படுத்தும் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சந்தைப் பொறுப்பாளர் எச்சரிக்கை செய்துள்ளார். (13)

## இம் மாதச்சம்பளம் 16 ஆம் திகதி

அரச ஊழியர்களுக்கான இம்மாதச்சம்பளத்தை 16 ஆம் திகதி வழங்க அரசு முடிவெடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதச்சம்பளம் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு நேரகாலத்தோடு வழங்கப்பட்டதால் இம் மாதச் சம்பளத்தையும் அதிகம் தாமதிக்காமல் வழங்கவே இந்த நடவடிக்கையாம்.

## செயற்கைமுறை சினைப்படுத்தலை சங்கானையிலும் மேற்கொள்ள ஏற்பாடு

சண்டிலிப்பாய் சந்திக்கு அருகாமையில் இருக்கும் சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் முற்பகலில் கோழிகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி மருந்து போடப்பட்டு வருகின்றது.

பசுமாடுகளுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்தலும் இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கான ஒழுங்குகளை சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி திருமதி எஸ். சத்தியநாதன் செய்துள்ளார். (13)

## மகாஜனா அருணோதயத்தில்

கடந்த ஒரு வருடகாலமாக தற்காலிகமாக பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பிற்பகலில் இயங்கிவந்த தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் பிற்பகல் வேளைகளில் இயங்க ஆரம்பித்துள்ளது.

பெருந்தொகையான மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் போக்குவரத்து பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு தற்காலிகமாக அளவெட்டிக்கு இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது. (13)

## ‘பிரெஞ் குழு மீதான தாக்குதல்- வடக்கு கிழக்கில் நடமாடும் மருத்துவ சேவையை நிறுத்தும் ஒரு முயற்சியே’

பிரெஞ் வைத்தியர்கள் குழு மீது ஸ்ரீலங்கா ஆகாயப் படையினர் மேற்கொண்ட தாக்குதலை இந்த எம். எஸ். எப். தொண்டர் நிறுவனத்தின் இலங்கை கூட்டமைப்பாளரான டாக்டர் அனோவின்சன்ட் மிகப்பாரதூரமான சம்பவமெனக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் நடமாடும் மருத்துவ சேவையை இடைநிறுத்தி வைப்பதற்கான் எனக் கோருவது போன்ற ஒரு செயல் இது என்றே எண்ணத் தோன்றுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தமது பணியாளர்களின் எதிர்காலம் குறித்து ஆராய்வதற்காகப் பாரிஸினை தளமாகக் கொண்டியங்கும் “மெடிஸின் சான்ஸ் புரொண்டியர்ஸ்” என்ற பிரெஞ் நிவாரண அமைப்பின் அதிகாரிகள் கொழும்பு வந்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க விமானப்படையின் தாக்குதலினால் காயமடைந்த நால்வரில் பிரெஞ் தாதிக்கும் இலங்கையரான சாரதிக்கும் காலில் ஏற்பட்ட மோசமான காயங்களுக்காகச் சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. காயமடைந்த மற்றைய தாதி ஜேர்மனியைச் சேர்ந்தவராவர்.

காயமடைந்த மூன்று வெளிநாட்டவர்களும் மேலதிக சிகிச்சைக்காக பிரெஞ்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் கிழக்கிலும் நடாத்தப்படுமாம்

கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஜுலை மாதத்தில் நடாத்த அரசு ஆலோசித்து வருவதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மேற்படி தேர்தலை நடாத்த அரசு விரும்புவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## விளையாட்டுத்துறை ஆசிரியர்களுக்கு இரண்டுநாள் செய்முறைப்பயிற்சி

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பாகவிருக்கும் ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் பயிற்சி முகாம் இம் மாதம் 20 ஆம், 21 ஆம் திகதிகளில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

20ஆம் திகதி அன்று பெண்களுக்கு நடாத்தப்படும் விளையாட்டுப் பயிற்சி முகாமில் வலைப்பந்து விதிமுறைப் பயிற்சியும், எறிபந்துப் பயிற்சியும் வழங்கப்படும். மறுநாள் 21ஆம் திகதியன்று ஆண்களுக்காக நடாத்தப்படும் பயிற்சி முகாமில் உதைபந்தாட்டப் பயிற்சி, கரப்பந்தாட்டப் பயிற்சி என்பன நடைபெறவுள்ளன.

இந்த இருநாள் பயிற்சி முகாமிலும் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான சகல ஆசிரியர்களும், ஆசிரியைகளும் தவறாது பங்குபற்ற வேண்டும் எனப் பண்டத்தரிப்புக் கோட்டக்கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். 23

## 1972 இல் அடையாள அட்டை பெற்றவர்கள் இப்போதவற்றைப் புதுப்பிக்கலாம்

1972, 73 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டு இன்னும் அதற்கு உரியவர்களிடம் இருக்கும் அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய அடையாள அட்டைகளை வழங்கும் வேலைகளை ஆட்பதிவுத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

விண்ணப்பதாரி தான் வதியும் பிரிவிலுள்ள கிராம சேவையாளரிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்களைப் பெறலாம் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 3 புகைப்படங்களுடனும், 22 ரூபா பெறுமதியுள்ள தபால் முத்திரைகளுடனும் பொருத்தமானவிடத்து சேவைச் சான்றிதழுடனும் கிராம அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

தற்போது வைத்திருக்கும் அடையாள அட்டையில் காணப்படும் பெயரிலோ அல்லது பிறந்த திகதியிலோ அல்லது பிறந்த இடத்திலோ மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இணைத்தல் வேண்டும். இவ்வேளை கைவசமுள்ள பழைய அட்டையினை விண்ணப்பதாரி ஒப்படைக்கத் தேவையில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1972, 73 ஆம் ஆண்டுகளில் அடையாள அட்டை வழங்கப்பட்டவர்களுக்கு அவை புதுப்பிக்கப்படவுள்ளதாக முரசொலி ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

## அக்கினிநட்சத்திரம்

இந்த ஆண்டு “அக்கினி நட்சத்திரம்” எனப்படும் கத்திரி வெயில் மே மாதம் 4ஆம் திகதியன்று துவங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மன்னார், வவுனியா சாலைகளுக்கு மாற்றம்

வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில், சாலைப் பரிசோதகர்களாகக் கடமையாற்றும் மூவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. வவுனியா, மன்னார் சாலைகளுக்கு இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறைச் சாலையில் கடமையாற்றும் ஐந்து உத்தியோகத்தர்களுக்கும் இவ்விதம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-12)

## பிலிப்பைன்ஸை நோக்கி சூறாவளி;

பங்களாதேஷில் வீசியதை விட மோசமான சூறாவளி ஒன்று பிலிப்பைன்ஸை அடுத்த சில தினங்களில் தாக்கலாமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்திய சூறாவளி மணிக்கு 140 மைல் வேகத்தையே கொண்டிருந்தது.

ஆனால் தற்பொழுது பிலிப்பைன்ஸை நோக்கி 170 மைல் வேகத்தில் சூறாவளி நகர்ந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

## தேர்தல் வாக்களிப்பில் யானைகளினால் அச்சுறுத்தல்

பொதுத் தேர்தல் தினத்தன்று இந்தியாவில் வாக்களிப்பைக் குழப்ப முயல்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென இந்திய அரசு அறிவித்துள்ளது.

ஆனால் மேகாலய பிரதேசத்தில் காட்டுயானைகளினால் வாக்களிப்புக் குழப்பப்படலாமென இந்தியத் தேர்தல் திணைக்களம் அஞ்சுகிறது.

இங்கு அடிக்கடி காட்டுயானைகள் அட்டகாசம் புரியும் மேகாலய பிரதேசத்தைத் தேர்தல்பதட்டத்திற்குரிய பிரதேசங்களின்பட்டியலில் அவர்கள்சேர்த்துள்ளனர்.

# மட்டுநகரில் வெள்ளை வாகனத்தில் பட்டப்பகலில் இளைஞர் கடத்தல்

மட்டக்களப்பு நகரில் சில தினங்களுக்கு முன்னர் பட்டப்பகலில் ஐந்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நகரில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரம் பகுதிக்கு பகல் 11 மணியளவில் வெள்ளை நிற வாகனத்தில் வந்த சிலர் அங்கு நின்றவர்களையும் வீதியால் சென்று கொண்டிருந்தவர்களையும் பலாத்காரமாகப் பிடித்து அவ்வாகனத்தில் ஏற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு நகரத்தில் பீதி நிலவுகிறதாகவும் மேலும்தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இங்குள்ள தனியார் கல்வி நிலையங்கள் நடைபெறவில்லை எனவும், பாடசாலைகளுக்கும் பிள்ளைகளை அனுப்பப் பெற்றோர் அஞ்சுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலங்களில் இங்கு மர்மப் படுகொலைகள் நடைபெறுவதுடன் வீதிகளில் சடலங்களும் முண்டங்களும் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## மன்னார் பகுதி ஆஸ்பத்திரிகளில் மருந்துத் தட்டுப்பாடு

மன்னார் மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் மருந்து வகைகளுக்குப் பற்றாக்குறை ஊழியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது என மன்னார் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் உள்ள ஆஸ்பத்திரிகள் திரிபோஷா விற்றாமின்ரோ போன்றவற்றை கர்ப்பிணிகள் குழந்தைகளுக்கு கொண்டு சென்று வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆஸ்பத்திரிகளில் எரிபொருள். வழங்கி இரவு நேரம் நோயாளருக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் எனவும்தெரிவிக்கப்பட்டது 38

## ஏப்ரல் ஓய்வூதிய வவுச்சர்கள் தபாலில் சேர்க்கப்பட்டன

ஏப்ரல் மாதத்திற்கான ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று சம்பந்தப்பட்டவர்களுக்கு தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாக யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தீவுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த ஓய்வூதியக்காரர்களின் வவுச்சர்கள தற்காலிகமாக இயங்கும் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன,

இதே வேளை யாழ்நகர வங்கிகளில் ஓய்வூதியம் பெறும் தீவக மக்களின் வவுச்சர்கள் தற்காலிகமாக செயலகத்தில் இயங்கும் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

ரயில்வே ஊழியர்களது ஓய்வூதிய வவுச்சர்களும் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 70

### கலைஞர் கருணாநிதி பேச்சு

## ஈழத் தமிழனுக்கு உதவியதால் தி. மு. க ஆட்சி கலைக்கப்பட்டது

முன்பு நெருக்கடி நிலைமையை எதிர்த்ததால் தி. மு. க ஆட்சி கலைக்கப்பட்டது இப்போது இலங்கைத்தமிழருக்கு உதவி செய்ததால் நமது ஆட்சி கலைக்கப்பட்டது இது நியாயமா?

இவ்வாறு தி. மு. க தலைவரும் முன்னாள் தமிழக முதலமைச்சருமான மு கருணாநிதி திருப்பத்தூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்; நாங்கள் என்ன தவறு செய்தோம் ஆட்சி கலைக்கப்படும் என்று சொன்னபோதும் கூட பிரதமர் சந்திரசேகர், "வதந்திகளை நம்பாதீர்கள் நான் ஜனநாயகவாதி தமிழகத்தில் திறமையான நிர்வாகம் நடைபெறுகிறது" என்று கூறியுள்ளார்.

கவர்னரின் அறிக்கையின்றி எமது ஆட்சி கலைக்கப்பட்டது என்றார்.

## புதைகுழியிலிருந்து சடலங்கள் மீட்பு

இன்னியவுக்கு அருகில் உப்பாறு என்ற இடத்தில் புதை குழிகளிலிருந்து 20 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (38)

## 'தமிழீழ மாணவர்'

மாணவர்களுக்கான "தமிழீழ மாணவர்" என்ற விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் அதிகார பூர்வ ஏடு இன்று வெளிவருகின்றது

---

**காரைநகர்...**

பைக்கற்றுக்கள் வழங்கப்படுகின்றன.

ஐந்தும் அதற்கு மேலும் அங்கத்தவர்கள் உள்ள குடும்பத்திற்கு 4 பைக்கற்றுகளும், மூன்று, நான்கு அங்கத்தவர்கள் உள்ள குடும்பத்திற்கு 3 பைக்கற்றுகளும், இரண்டு அங்கத்தவர்கள் உள்ள குடும்பத்திற்கு 2 பைக்கற்றுகளும், ஓர் அங்கத்தவர் உள்ள குடும்பத்திற்கு 1 பைக்கற்றும் வழங்கப்பட்டு வருகின்றன. (12)

---

**புலிகளின்...**

- ★ அதற்குரிய ரவைகள் - 13
- ★ ஜே ஆர் கைக்குண்டுகள் - 08
- ★ ஏ கே, கோல்சர் - 7
- ★ தண்ணீர் போத்தல் - 04
- ★ அதற்குரிய கோல்சர் - 1
- ★ ரீ-56 - II - 06
- ★ ரீ - 56, 01 - 02
- ★ 7 62 நடுத்தர ரவைகள் - 3053
- ★ குண்டு துளைக்காத அங்கி - 01
- ★ இராணுவ பை - 04

ஆகியவை விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. (71,70)

---

**கிழக்கின்...**

மறுதினம் காட்டுப்பகுதியில் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர் எனினும் சேத விவரம் தெரியவரவில்லை; 71

---

**கப்டன்...**

மாவீரனின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர்.

இதே வேளை மேற்படி தாக்குதலில் கைப்பற்றப்பட்ட பெருமளவு ஆயுதங்களும் அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. (70)

---

**வவுனியாவில்...**

11படையினர் காயமடைந்ததாகவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

---

**விமானங்கள்...**

தாக்குதலை காலை முதல் மாலை வரை நடத்தின. (71)

---

**பூநகரியில்...**

கருவாடு, அப்பியாசப் புத்தகம், பென்சில் என்பன பூநகரி ப. நோ. கூ. சங்க இளை நிலையங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. ம-35

---

## தமிழீழம் பெறுவோம்

- அக்கினிப் பிஞ்சு -

இரும்புக் கரும்புலி இதயத்துரம் பெறும் - தமிழீழம்
அரும்பித் தரும்வலு பெரும்புத் துணர்வுடன்
- திறனோடும்
விரும்பித் தருமுயிர் விலங்கிற் றுடைபடக் - கடகோடி
தொருங்கிற் றடிபட நடுங்கிக் கொடியவர் - நலஞ்சாய
வரும்வித் தகர்இவர் வரம்பெற் றெழுதலை-முறைதோர
நிரம்பிற் றெனஇன மனம்பெற் றனைவரும் - உடன்கூடி
ஒருங்கிருந் துருபகை அடங்கப் பலமுடன் - ஒருசேர
கரும்புக் கிணையென விரும்பித் துணைவரப்-பெறலாமே

(கரும்புலிகள் எழுச்சி நாளை முன்விட்டு இக்கவிதை பிரசுரமாகிறது)

## தீவக அகதிகளுக்கு வீடமைப்புத்திட்டம்

தீவும் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு குடாநாட்டில் மேலதிகமாக 1500 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரியாலை, நாவற்குழி, கைதடி, காக்கைதீவு ஆகிய இடங்களிலேயே வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அரியாலையில் 250 வீடுகளை தமிழர் புனர் வாழ்வுக் கழகம் அமைக்கவுள்ளது. அத்துடன் நாவற்குழியில் 500 முதல் ஆயிரம் வரையிலான வீடுகளும், கட்டப்பட்டுவருகின்றன.

இதேவேளை கைதடி, காக்கைதீவுப் பகுதிகளிலும் வீடுகளை அமைப்பதற்குப் பல தொண்டர் நிறுவனங்கள் கேட்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (70)

### நேபாள தேர்தல் முடிவுகள்

## காத்மண்டு தொகுதியில் கம்யூனிஸ்ட் முன்னணியில்

நேபாளத்தில் முப்பது வருடங்களின் பின்னர் நேற்று முன் தினம் நடாத்தப்பட்ட பொதுத்தேர்தலில் ஆளும் நேபாளி கொங்கிரசுக்கும், நேபாளி கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில கடும்போட்டி நிலவுகிறது.

தலைநகர் காத்மண்டு தொகுதியில் வாக்குகள் எண்ணப்பட்டு வரும் சகல பகுதிகளிலும் நேபாளி கம்யூனிஸ் கட்சியே முன்னணியில் நிற்கிறது காத்மண்டுவில் கொங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட தற்போதைய பிரதமர் பட்டாராய் மிகவும் பின்னடைவான நிலையிலேயே இருக்கின்றார்.

நேபாளி கம்யூனிஸ் கட்சி தீவிர இந்திய எதிர்ப்பு கட்சி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆசிரிய இடமாற்ற சுற்றறிக்கை மொழிபெயர்ப்பு விளக்கமில்லை

விசேடகல்வி ஆசிரியர்களை தேவைக்கு அதிகமான ஆசிரியர்களாக கணித்து இடமாற்றம் செய்வதை தவிர்க்குமாறு கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர்பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சின் செயலாளர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பு விளக்கமில்லை எனவும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்துடன் சிங்கள சுற்றறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளது. 78

## போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம்

வடக்குக் கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள மாவட்டங்களில் குடியேற்ற உத்தியோகத்தர்களுக்கும் காணி ஆணையாளர் திணைக்கள வெளிக்களப் போதனாசிரியருக்குமான பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

மாவட்ட ரீதியான வெற்றிடங்களை அம்மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படுவர் விவரங்களை தங்கள் பகுதி உதவி அரசாங்க அதிபர், உதவி ஆணையாளர் ஆகியோரிடம் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 31 ஆம் திகதியாகும். (38)

---

**ஐந்து...**

ராடமி கிழக்கு, எச் ஜோசவ்-தீவுகள் வடக்கு, ஊர்காவற்துறை, என். வேதநாயகன்-நெடுந்தீவு. செல்வி பீ கோஜினி-வலி தெற்கு உடுவில், எல். இளங்கோவன்-தீவுகள் தெற்கு. வேலணை.

வடக்குக் கிழக்கு மாகாண சபையினால் இம்மாதம் முதல் இவர்களது நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. 70

---

**நெடுந்தீவுப்...**

வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து ஏனைய பயணிகளை குறிகாட்டுவான் துறைக்குச் செல்லப் படையினர் அனுமதித்தனராம். (78)

---

## காலமானார்

### செல்லையா இளையதம்பி

(மல்லிகா லொறி உரிமையாளர்)

சரவெட்டி மத்தியைச் சேர்ந்த திரு. செல்லையா இளையதம்பி (மாட்டு வண்டிச் சவாரிக்காரர்) 13-5 91 இல் காலமானார்.

இவர் காலம் சென்ற பத்தினிப்பிள்ளையின் அன்புக் கணவரும் மனோகரி, மனோரம்மா, மல்லிகா, மதிவதனி, இருத்திகா, இருத்திபன், இருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா, பாலேந்திரன், புவனேந்திரன் ஆகியோரின் மாமனாரும் காலம்சென்ற கந்தசாமி, பாலசுப்பிரமணியம், வள்ளிப்பிள்ளை, இரத்தினம் திரவியம் ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 14-5-91 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக சோளப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சரவெட்டி மத்தி, சரவெட்டி. தகவல்; வ. தவராசா 05071

---

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

சாவகச்சேரி சந்தைப் பகுதியில் 1 சோடி சிறிய காப்பு கண்டு எடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

சண்ரேடேர்ஸ்,
இல, 66, மார்க்கற் உட்புறம்,
சாவகச்சேரி.

05072

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ், (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி "லக்ஷ்மி"பில்டிங்"இல் உள்ள அச்சகத்தில் 14.05.1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.